Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate, Gingee
C.C .249 / 20 20 Pw-1

Name -கோமதி

Father Name -க/பெ பாஸ்கர்

Village - புத்தகரம்

Taluk -

Religion -

Age - 27

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14.12.2021

முதல் விசாரணை

நான் தற்போது புத்தகரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது அமுதம் பத்திரிக்கையில் ரிப்போட்டராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும்,, அவர்கள் எங்கள் தெருவை சே ர்ந்தவர்கள். கடந்த 23.03.2017 ம் தேதி பி.டி.ஓ அலுவலகத்திலும் மற்றும் துணை ஆட்சியர் அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் எங்கள் தெருவில் ஆக்கிரமைப்பு சம்மந்தமாக மனு கொடுத்திருந்தோம். அதன் பேரில் அன்று வருவாய் துறை அலுவலர்கள் எங்கள் தெருவில் ஆக்கிரமைப்புகளை அகற்றினார்கள். அன்று இரவு சுமார் 7.00 மணிக்கு நானம் என் கணவரும் வீட்டில் இருக்கும்போது ஆஜர் 1, 2 எதிரிகள் எங்கள் வீட்டிற்கு முன்னால் வந்து என்னை அன்று வந்த வருவாய் அலுவலர்களுடன் தவறாக சேர்த்து வைத்து அசிங்கமாக பேசினார்கள். பின்னர், வெளியே வாடா உன்னை வெட்டிவிடுவேன் என் கொலை மிரட்டல் விடுத்தார்கள். பின்னர் நான் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். பின்னர் காவல் நிலையத்தில் இருந்து 2 காவலர்கள் வந்த எதிரிகளுடன் அவ்வாறு செய்யகூடாது என்று கூறினார்கள். மீறியும்,, எதிரிகள் அதை வேலையை செய்து வந்ததால் மறுநாள் நான் ந.பி.பெற்றாள் காவல் நிலையம் சென்று எதிரிகள் மீது புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் .அ.த.சா1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரிகள் அவர்கள் வீட்டில் இருசக்கர வாகனம் நிறுத்துவதற்கு ஏதுவாக

படிக்கட்டியதால்தான் எனக்கும் அவருக்கும் பிரச்சனை என்றால் சரிதான். எங்கள் தெருவில் டிராக்டர், கார் போன் ற வாகனங்கள் செல்ல இடம் உள்ளது. ஆனால் லாரி செல்லாது. பொதுவாக படிக்கட்டும்போது இருசக்கரம் வாகனம் ஏறுவதற்கு ஏதுவாக கட்டுவார்கள் என்றால் சரிதான். ஆனால் ஆஜர் எதிரிகள் பஞ்சாயத்து ஃபோரை மூடி அதன் மீது படி கட்டினார்கள். அவ்வாறு எதிரிகள் பஞ்சாயத்து ஃபோரை மூடி படி கட்டியதாக எனது புகாரில் கூறவில்லை. இவ்வழக்கின் 2ம் பட்டியல் சாட்சி என் கணவர். 3 முதல் 7 பட்டியல் சாட்சிகள் எங்கள் தெருவை சார்ந்தவர்கள். என் கணவரும் அவருடன் 5 பத்திரிக்கை நிருபர்களும் ஒன்றாக சேர்ந்து ஆட்சியரிடம் புகார் அளித்தார்கள். எதிரிகளின் வீட்டு அருகில் அந்த தெருவில் உள்ள மற்றவர்களும் பொது இடத்தை ஆக்கிரமித்து சுவர் எழுப்பி உள்ளார்கள் என்றாலும், ஆனால் ஆஜர் எதிரிகளின் வீடு ஆக்கிரமிப்பு மட்டும் தான் இடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது சுமார் 10 - 20 நபர்கள் இருந்தார்கள். வட்டாட்சியர் வந்து விசாரித்தபோது மேற்படி படியை அகற்றுவதாக ஆஜர் எதிரி அவரிடம் தெரிவித்தார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் ஊரில் இல்லாத சமயத்தில் நாங்கள்தான் படியை இடித்தோம் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் அன்று கால் மணி நேரத்தில் ந.பி பெற்றால் காவல் நிலையத்திற்கு சென்றுவிடலாம். 3 முதல் 5 பட்டியல் சாட்சிகள் ஆஜர் எதிரிகளுக்கு பக்கத்து கழனிக்காரர்கள் என்றால் சரிதான். ஊரில் இறப்பு ஏற்பட்டால் எதிரியின் நிலம் வழியாக சுடுகாட்டிற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். அதை ஆஜர் எதிரிகள் ஆட்சேபித்ததால் 3 முதல் 5 பட்டியல் சாட்சிக்ள் துண்டுதல் பேரில் எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆஜர் எதிரிகளை அசிங்கம்ாக திட்டி கொரைல மிரட்டல் விடுத்து தற்போது எதிரிகள் மீது தவறாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பத்திரிக்கை நிறுபராக இருப்பதால் நான் என் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி எதிரிகள் மீது தவறாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையாக இருந்திருந்தால் நான் சம்பவம் அன்று புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல.

Taken down before/me in Open
Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Judicial Magistrate, Gingee.